**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 01 - 2019**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 01 இன் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 யூன் 28 ஆம் திகதிய 2947- எஸ்ஆர்ஜ மற்றும் 2948- (எஸ்எவ்) ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.10 (அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

---

நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாவிருந்த தற்போதைய நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாக பகுதியில் வசிப்பவர்களிற்கான நகர சூழல் மற்றும் வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. நிகழ்ச்சித்திட்டமானது (அ) கொழும்பு நகரத்தில் நீர் வழங்கல் முறைமை புனரமைத்து விரிவாக்குதல் மற்றும் வருமானமற்ற தண்ணீரைக் குறைத்தல், (ஆ) கொழும்பு பெரும்பாகத்தில் கழிவு நீர் அகற்றல் சேவையை முன்னேற்றுதல், (இ) சேவை வழங்குநர்கள் மற்றும் முகாமையின் நிறுவனரீதியான கட்டமைப்பு மற்றும் இயலளவை வலுப்படுத்தல், (ஈ) முதலீட்டு செயற்திட்டங்களை அமுலாக்கல் என்பவற்றினை எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 12 கூறுகளின் கீழ் அமுலாக்கப்படுகின்றன. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 14,784 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 112 மில்லியனாகும் அதில் ரூபா 11,088 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 84 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி தொகை ரூபா 3,696 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 28 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. நிகழ்ச்சித்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 செப்தெம்பர் 25 இல் தொடங்கியிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர் நிகழ்ச்சித்திட்டத்தின் காலப்பகுதி 2020 திசெம்பர் 31 வரை இரண்டு தடவை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழிவுள்ள அபிப்பிராயம்**

---

என்னுடைய அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2019 திசெம்பா் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசாா் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்தவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொடருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்கு ஏற்றவாறு நிகழ்ச்சித்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு நிகழ்ச்சித்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ்

கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்காத ஒப்பந்த பொதி 02 இன் 18 ஆம் இலக்க இடைக்கால கொடுப்பனவு சான்றிதழிலிருந்து கழிக்கப்பட்ட ரூபா 95.44 மில்லியன் தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணம் மற்றும் ரூபா 8.1 மில்லியன் தொகையான பிடிகாசு என்பன நிதிக்கூற்றுக்களில் ரூபா 103.54 மில்லியனால் நடைபெறும் வேலையின் பெறுமதியை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 103.54 | செயற்திட்டத்தின் நடைபெறும் வேலையின் பெறுமதியை குறைத்துக் காட்டல். | அந்த தொகைகள் ஆண்டு இறுதியில் ஒப்பந்தகாரருடைய செலுத்த வெண்டிய விலைப் பட்டியல் கணக்கீட்டுடன் தொடர்புபட்டது. கணக்காய்வாளருடைய சிபார்சினை அடிப்படையாக கொண்டு, எதிர்காலத்தில் ஆண்டு இறுதியில் செலுத்த வேண்டியவை கணக்கீடு செய்யப்படுகின்ற போது தொழிலாரம்பிப்பு முற்பணங்கள் மற்றும் பிடி காசினை நாங்கள் இனங்காண்போம். | குறைபாட்டினை திருத்துவதற்கு சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் பெறுகையிலிருந்து கடனளிக்கும் முகவரால் அறவிடப்பட்ட ரூபா 614 மிலிலியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 3.8 மில்லியன் கூட்டுத் தொகையான வட்டிகள் மற்றும் கடப்பாட்டு கட்டணங்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் கைதவிர்ப்பு கையேட்டின் 4.12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | 614 | கடன் மீதிகள், வட்டி மற்றும் கடப்பாட்டு கட்டணங்களின் குறைத்தக் கூறல் | செயற்திட்டமானது மேலதிக பொது முகாமையாளர் (நிதி) இன் அறிவுறுத்தலிற்கு அமைய வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. (GCWWMIIP இன் வேறு கணக்காய்வு ஐயவினாவிற்கான பதிலுடன் ஏற்கனவே வழங்கப்பட்டன) எவ்வாறாயினும், வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் உரிய செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களின் கணக்குகளிற்கான குறிப்பு இல. 19 இன் கீழ் | கடனளிக்கும் முகவரால் நேரடியாக அறவிடப்பட்ட உரிய கிரயமானது ஆண்டின் இறுதியில் பயன்படுத்திய தொகையை காட்டுவதற்கு இயலக்கூடியவாறு நிதிக் கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இதன் விளைவால், கடன் பெறுகைகள் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | | கணக்கிற்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. | |
| (இ) | காணி மற்றும் வாகனத் தரிப்பிட என்பவற்றிற்கு கொழும்பு மாநகர சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 3.30 மில்லியன் தொகையான வாடகை நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | 3.30 | செயற்திட்டத்தின் செலுத்த வேண்டியவை மற்றும் நடைபெறும் வேலைகள் என்பன குறைத்துக்கூறல் | இந்த குறித்த கொடுப்பனவு தொடர்புபட்ட ஆவணங்கள் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களை இறுதியாக்கும் வரை செயற்திட்டத்தால் பெறப்பட்டிருக்கவில்லை. ஆகவே, அந்த பட்டியல், செலுத்த வேண்டியவையாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன் செயற்திட்டமானது கணக்கீட்டு நோக்கத்திற்காக சரியான நிதிப் பொறுப்பினை மதிப்பிடுவதற்கு எந்தவொரு எழுத்து மூல உடன்படிக்கையும் செய்திருக்கவில்லை. | மீளாய்வாண்டின் போது செலுத்த வேண்டிய சரியான தொகை இனங்காண்பதற்கு நடடிக்கை எடுக்க வேண்டியதுடன் நிதிக்கூற்றுக்கு கொண்டுவரப்பட வேண்டும். |
| (ஈ) | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் (DRMS-814) அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நேரடிக் கொடுப்பனவுகள் மற்றும் மீள் நிதியளிப்புகளின் பெறுமதி ரூபா 1905.27 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களில் ரூபா 1,908.08 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது. எனவே, இரண்டு மீதிகளிற்கும் இடையில் ரூபா 2.81 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் வித்தியாசங்களை | 2.81 | நேரடிக் கொடுப்பனவுகள் அதிகரித்துக் கூறல் | செயற்திட்டத்தின் நேரடிக் கொடுப்பனவுகள் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அறிக்கை (814 அறிக்கை) அடிப்படையில் நாளது வரையாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், விசேடமாக ஆண்டு இறுதியல் அறிக்கை நாளது வரையாக்குகின்ற கால இடைவெளி கருத்திற்கொள்ளக் கூடியதாக இருந்தது. இந்த ஆண்டிலும், 814 அறிக்கை 2020 பெப்ரவரி இறுதியிலேயே வெளியீடு கிடைத்திருந்தது. செயற்திட்டமானது நிதிக்கூற்றுக்களை இறுதியாக்குவதற்கு அத்தகைய காலம் வரை காத்திருக்க | மீளாய்வாண்டின் போதான மீள்நிதியளிப்புகள் மற்றும் நேரடிக் கொடுப்பனவுகள் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் DRMS- 814 அறிக்கையுடன் இணக்கம் செய்ய வேண்டியதுடன் இதன்படி செயற்திட்ட நிதிக்கூற்றுக்களை திருத்த வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | முடியவில்லை. ஆண்டு இறுதியில் டொலர் கொடுக்கல் வாங்கல்கள் ஆண்டு இறுதியிலுள்ளவாறான நாணய மாற்று வீதத்தின் அடிப்படையில் நாளது வரையாக்கப்பட்டிருந்தன. முரண் காரணமான குறைந்த அல்லது அதிகரித்த சீராக்கல் 814 அறிக்கையில் அறிக்கையிடப்பட்ட உள்ளபடியான தொகைகளை கருத்திற்கொண்டு அடுத்துவரும் ஆண்டில் கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்தன.<br><br>இங்கு கணக்காய்வாளர்கள் இனங்கண்டு குறிப்பிடப்பட்ட வித்தியாசம் அந்த காரணமாகவே உள்ளது. செயற்திட்டமானது அத்தகைய சீராக்கல்களை செய்யவோ அல்லது வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் உரிய நேரத்தில் 814 அறிக்கையை வழங்க வேண்டும். | |
| (உ) | மீளாய்வாண்டின் போது துணைநிலை கடன் வட்டி, பிடித்துவைத்தல் வரி மற்றும் தேசத்தை கட்டியொழுப்புதல் வரி, சம்பங்கள் என்பவற்றின் பெறுமதி ரூபா 145.97 மில்லியன் கூட்டுத் தொகையான பொருட்கள் மாற்றல் என்பன செயற்திட்த்தின் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால், செயற்திட்டத்தின் நடைபெறும் வேலை அதே தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது. | 145 | நடைபெறும் வேலைகள் குறைத்துக்கூறல் | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பேரேட்டிற்கும் செயற்திட்டத்தின் புத்தகங்களிற்கும் இடையிலான வித்தியாசத்தின் பெறுமதிக்கான நடைபெறும் வேலை இணக்கக்கூற்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை வரைவு கணக்காய்வு அறிக்கைக்கான பதிலுடன் சேர்த்து கணக்காய்வாளர்களிற்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | இணக்கம் செய்யப்பட்ட பின்னர் இதன்படி வித்தியாசத்தை நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட வேண்டும். |

3. பௌதீக செயலாற்றல்

3.1 பௌதீக முன்னெற்றம்

<table>
<tr><th>இல</th><th>நடவடிக்கைகள்</th><th>அலகுகள்</th><th>எதிர்பாரக்கப்பட்ட இலக்கு</th><th>2019 திசெம்பர் 31 இல் அடையப்பட்ட இலக்கு</th><th>விளைவு</th><th>முகாமைத்துவத்தின் பதில்</th><th>கணக்காய்வாளருடைய சிபார்சுகள்</th></tr>
<tr><td>(அ)</td><td>கொழும்பு நகரத்தின் வடக்குப் பகுதியில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்காக முறைமை புனரமைப்பு</td><td></td><td></td><td></td>
<td rowspan="5">நிர்மாணம் மற்றும் பட்டியலிடப்பட்ட ஒப்பந்த காலப் பகுதிக்குள் ஒப்பந்தத்தை பூர்த்தியாக்குவதற்கு இயலக்கூடியவாறு தாமதப்படுகின்றன. இதன் விளைவால், கொழும்பு நகரத்தில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பின் 18 சதவீதம் எதிர்பாரக்கப்பட்ட இலக்கை அடைவதற்கு இயலதிருந்தது.</td>
<td rowspan="5">I) 2020 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு பின்வரும் விபரங்களை நாங்கள் முன்வைக்கின்றோம்.
<table>
<tr><th>பகுதி</th><th>பொதுவான கருத்துரை</th><th>பட்டிய லிடப்பட்ட பூர்த்தி யாக்கல்</th></tr>
<tr><td>வடக்கு</td><td>2015 சனவரி</td><td>2020 திசெம்பர்</td></tr>
</table>
<table>
<tr><th>பூர்த்தி யாகிய DMAs மற்றும் O &M இற்கு கையளிக்கப்பட்டது</th><th>பூரத்தி யாகிய DMAs (NRW செயற் பாட்டில் உள்ளது )</th><th>பூரத்தி யாகிய DMAs (பூர்த்தி யாக்கல் )</th><th>பூர்தி யாகிய குழாய் குழாயிடல் கிமீ</th><th>பூர்த்தி யாகிய வீட்டு இழப்பீடு</th></tr>
<tr><td>5</td><td>8</td><td>3</td><td>205</td><td>31,714</td></tr>
</table>
எவ்வாறாயினும், வருமானமற்ற தண்ணீரின் பெறுமதி 39 சதவீதத்திற்கு கீழ் படிப்படியாக</td>
<td rowspan="5">பட்டியலிடப்பட்ட ஒப்பந்த காலப்பகுதிக்குள் வேலைகளை பூத்தியாக்குவதற்கும் செயற்திட்ட கண்காணிகப்பு குழுவால் ஒப்பந்த வேலைகளை நெருக்கமாக கணக்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.</td></tr>
<tr><td></td><td>- குழாய்கள் பொருத்துதல்</td><td>மீற்றர்</td><td>205,017</td><td>191,928</td></tr>
<tr><td></td><td>- இணைப்புகள் மாற்றல்</td><td>வீடுகள்</td><td>37,173</td><td>15,518</td></tr>
<tr><td></td><td>- முழுமையாக பூர்த்திக்கப்பட்ட DMAS</td><td>எண்ணிக்கை</td><td>16</td><td>05</td></tr>
<tr><td></td><td>- ஒப்பந்தத்தின் ஒட்டு மொத்த முன்னேற்றம்</td><td>சதவீதம்</td><td>97.75</td><td>82.36</td></tr>
</table>

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | வீழ்ச்சியடைந்துள்ளதுடன் வருமானமற்ற தன்னீரின் சராசரிப் பெறுமதி பூர்த்தியாக்கப்பட்ட DMAs இற்காக தற்போது வரை 15.2 சதவீதமாக உள்ளமையும் அவதானிக்கப்பட்டது. செயற்திட்டததின் இலக்கை அடைவதற்கு இந்த ஆண்டான 2020 இறுதியில் இந்த மிகுதி DMAs ஐ பூர்தியாக்கி கையளிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. | |
| (ஆ) | கொழும்பு நகரத்தின் கிழக்குப் பகுதியில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்காக முறைமை புனரமைப்பு | | | | பட்டியலிடப்பட்ட ஒப்பந்த காலப்பகுதிக்குள் வேலைகளை பூத்தியாக்குவதற்கும் செயற்திட்ட கண்காணிகப்பு குழுவால் ஒப்பந்த வேலைகளை நெருக்கமாக கணக்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு பின்வரும் விபரங்களை நாங்கள் முன்வைக்கின்றோம். | பட்டியலிடப்பட்ட ஒப்பந்த காலப்பகுதிக்குள் வேலைகளை பூத்தியாக்குவதற்கும் செயற்திட்ட கண்காணிகப்பு குழுவால் ஒப்பந்த வேலைகளை நெருக்கமாக கணக்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | - குழாய்கள் பொருத்துதல் | மீற்றர் | 237,083 | 161,558 | | | |
| | - இணைப்புகள் மாற்றல் | வீடுகள் | 25,256 | 1,098 | | | |
| | - முழுமையாக பூர்த்திக்கப்பட்ட DMAS | எண்ணிக்கை | 20 | 03 | | | |
| | - ஒப்பந்தத்தின் ஒட்டு மொத்த முன்னேற்றம் | சதவீதம் | 78.44 | 68.15 | | | |

| பகுதி | பொதுவான கருத்துரை | பட்டிய லிடப்பட்ட பூர்த்தி யாக்கல் |
|---|---|---|
| கிழக்கு | 2015 யூலை | 2021 யூன் |

| பூர்த்தி யாகிய DMAs மற்றும் O &M இற்கு கையளிக்கப்பட்டது | பூரத்தி யாகிய DMAs (NRW செயற் பாட்டில் உள்ளது) | பூரத்தி யாகிய DMAs (பூர்த்தி யாக்கல்) | பூர்தி யாகிய குழாய் குழாயிடல் கிமீ | பூர்த்தி யாகிய வீட்டு இழப்பீடு |
|---|---|---|---|---|
| 4 | 7 | 4 | 212 | 27,464 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | எவ்வாறாயினும், வருமானமற்ற தண்ணீரின் பெறுமதி 39 சதவீதத்திற்கு கீழ் படிப்படியாக வீழ்ச்சியடைந்துள்ளதுடன் வருமானமற்ற தன்னீரின் சராசரிப் பெறுமதி பூர்த்தியாக்கப்பட்ட DMAs இற்காக தற்போது வரை 15.2 சதவீதமாக உள்ளமையும் அவதானிக்கப்பட்டது. செயற்திட்டத்தின் இலக்கை அடைவதற்கு இந்த ஆண்டான 2020 இறுதியில் இந்த மிகுதி DMAs ஐ பூர்தியாக்கி கையளிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. | |
| (இ) | மாலிகாகந்த வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்காக கட்டிட நிர்மாணம் | சதவீதம் | 100 | 81.38 | வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்காக கட்டிட நிர்மாண பூர்த்தியாக்கலில் தாமதம். | செயற்திட்ட அமுலாக்கல் பிரிவு செயற்திட்டத்திற்கான வள உள்ளீடுகளை அதிகரிப்பதற்கு ஒப்பந்தகாரரை நெருக்குவதற்கு பல படிமுறைகளை எடுத்திருந்தது. பொது முகாமையாளர் (NWSDB) குறிப்பிடப்பட்டவாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தலைமை அலுவலகத்தில் 2020 யூன் 15 மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தலைவரால் குறிப்பிடப்பட்டவாறு மாலிகாகந்த வேலைத்தளத்தில் 2020 செப்தெம்பர் 07 இல் ஆகிய திகதிகளில் நடாத்தப்பட்ட விசேட கூட்டங்கள் உள்ளடங்கலாக ஒப்பந்தகாரருடைய தலைவர் (CEO) மற்றும் ஏனைய பிரதான பதவியணியினர் என்போருடன் பல கூட்டங்களை நடாத்தியிருந்தது. | வேலைகளின் முன்னேற்றங்களை நெருக்கமாக கண்காணித்தல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | மேற்குறிப்பிட்ட கூட்டங்களின் விளைவால், அதிகமான வேலைகள் நிறைவேற்றப்பட்டன. (சீலிங் பான், பிரித்தல் வேலைகள், ஏசி வேலைகள், தீயணைப்பு பொருத்துதல் மற்றும் கூட்ட தீர்மானத்தின் பிரகாரம், எஸ்கிறோ கணக்கு பொறியியலாளரால் திறக்கப்பட்டதுடன் கொடுப்பனவுகளை உறுதிப் படுத்துவதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் முகாமை செய்யப்பட்ட வருமானமற்ற தண்ணீர் குறைப்பு கட்டிடத்தின் நிர்மாணத்துடன் தொடர்புடைய வேலைகளை நெறிப்படுத்தியிருந்தனர். | |
| (ஈ) | கசிவுகளை கண்டுபிடித்தல் மற்றும் சகல ஏனைய தொடர்புபட்ட உபகரணங்களை வழங்கி பொருத்துதல் | ஒப்பந்தம் பரஸ்பரம் இடைநிறுத்தப்பட்டது.<br><br>இந்த ஒப்பந்தத்தின் கீழ் உள்நாட்டு கொள்வனவுகள் பூர்த்தியாக்கப்பட்ட போதிலும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் வெளிநாட்டு கொள்வனவிற்காக புதிய ஒப்பந்தம் 2020 யூன் 10 இலேயே வழங்கப்பட்டிருந்தது. | கசிவுகளை கண்டுபிடிக்கும் உபகரணம் வழங்குதலில் தாமதம். | முன்னைய ஒப்பந்த்தின் வெளிநாட்டு பகுதி தொடர்புபட்ட வருமானமற்ற தண்ணீர் உபகரணம் கொள்வனவு செய்வதற்கு புதிய கேள்வி 2018.05.23 இல் கோரப்பட்டது. எவ்வாறாயினும், கேள்வியாளர்களின் தொழில்நுட்ப தகைமைகள் இல்லாமை காரணமாக கேள்வி 2019.04.03 இல் திரும்ப கோரப்பட்டிருந்ததுடன் இறுதியாக இது GCWWMIIP/A/ADB/EQUIP/ICB/07 ஆம் இலக்க ஒப்பந்தத்தின் கீழ் 2020.06.10 இல் வழங்கப்பட்டிருந்தது. | வேலைகளின் முன்னேற்றங்களை நெருக்கமாக கண்காணித்தல் வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

**இல** — **கணக்காய்வு அவதானிப்பு**

(அ) கொழும்பு நகரத்தின் வடக்குப் பகுதியில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான புனரமைப்பு முறைமைக்கான ஒப்பந்தம் 2014 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் 2018 யூலையில் பூர்த்தியாகப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

பின்னர், ஒப்பந்த காலப்பகுதி 2020 பெப்ரவரி வரை நீடிக்கப்பட்டிருந்தது. 205,017 மீற்றர் குழாயிடல் வேலைகள் மற்றும் 16 மாவட்ட மீற்றரிடல் பகுதிகளிலுள்ள 37,173 வீட்டுரிமையாளர்களிற்கு பரிமாற்ற சேவைகளை வழங்குதல் என்பன பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப் பட்டிருந்தது. எவ்வாறாயினும், 191,928 மீற்றர் குழாய்கள் குழாயிடல் வேலைகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப் பட்டிருந்ததுடன் 15,558 வீட்டுரிமையாளர்களிற்கு மாத்திரம் பரிமாற்ற சேவைகள் வழங்கப்பட்டிருந்தது. 2020 யூன் 30 இல் உள்ளவாறு 201,606 மீற்றர் குழாய்கள் குழாயிடல் வேலைகள்

**விளைவு**

நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களின் படி, கொழும்பு நகர பகுதியில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பதில் தாமதம்.

**முகாமைத்துவத்தின் பதில்**

2020 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு பின்வரும் விபரங்களை நாங்கள் முன்வைக்கின்றோம்.

| பகுதி | பொதுவான கருத்துரை | பட்டியலிடப் பட்ட பூர்த்தியாக்கல். | பூர்த்தியாகிய DMAS மற்றும் O &M இற்கு கையளிக்கப் பட்டது | பூரத்தியாகிய DMAS (NRW செயற்பாட்டில் உள்ளது) | பூரத்தியாகிய DMAS (பூர்த்தியாக்கல்) | பூர்தியாகிய குழாய் குழாயிடல் கிமீ | பூர்த்த ி யாகிய வீட்டு இழப்பீடு |
|---|---|---|---|---|---|---|---|
| வழக்கு | 2015 சனவரி | 2020 திசெம்பர் | 5 | 8 | 3 | 205 | 31,714 |

எவ்வாறாயினும், வருமானமற்ற தண்ணீரின் பெறுமதி 39 சதவீதத்திற்கு கீழ் படிப்படியாக வீழ்ச்சியடைந்துள்ளதுடன் வருமானமற்ற தன்னீரின் சராசரிப் பெறுமதி பூர்த்தியாக்கப்பட்ட DMAs இற்காக தற்போது வரை 15.2 சதவீதமாக உள்ளமையும் அவதானிக்கப்பட்டது. செயற்திட்டததின் இலக்கை அடைவதற்கு இந்த ஆண்டான 2020 இறுதியில் இந்த மிகுதி DMAs ஐ பூர்தியாக்கி கையளிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

**கணக்காய்வாளருடைய சிபார்சுகள்**

பட்டியலிடப்பட்ட ஒப்பந்த காலப்பகுதிக்குள் வேலைகளை பூத்தியாக்குவதற்கும் செயற்திட்ட கண்காணிப்பு குழுவால் ஒப்பந்த வேலைகளை நெருக்கமாக கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மற்றும் 19,508 வீட்டு உரிமையாயர்களின் பரிமாற்ற சேவை வேலைகள் இருந்தது. 16 மாவட்ட மீற்றரிடல் பகுதிகளில், 05 மாவட்ட மீற்றரிடல் பகுதிகள் மாத்திரம் முழுமையாக பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வருமானமற்ற தண்ணீர் குறைப்பின் முகாமைத்துவத்தை ஈடுபடுத்துவதற்கு கையளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கொழும்பு நகரத்தின் கிழக்குப் பகுதியில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான புனரமைப்பு முறைமைக்கான ஒப்பந்தத்தின் கீழான குழாயிடல் வேலைகளின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு 2020 ஒக்தோபர் 01 அளவில் 237,083 மீற்றர்கள் குழாயிடல் வெலைகள் மற்றும் 25,256 வீட்டுரிமையாளர்களிள் பரிமாற்ற சேவை வழங்கல் பூர்த்தியாக்குவதற்கு மதிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 161,558 மீற்றர் குழாயிடல் வேலைகள் மற்றும் 20 மீற்றரிடல் மாவட்டங்களில் 1,098 வீட்டு உரிமையாளர்களிற்கான குழாயிடல் வேலைகள் மாத்திரம் பூர்த்தியாக்கப் பட்டிருந்ததுடன் 2020 யூலை மாதத்தில்

நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களின் படி, கொழும்பு நகர பகுதியில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பதில் தாமதம்.

2020 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு பின்வரும் விபரங்களை நாங்கள் முன்வைக்கின்றோம்.

| பகுதி | பொதுவான கருத்துரை | பட்டியலிடப் பட்ட பூர்த்தியாக்கல் | பூர்த்தியாகிய DMAS மற்றும் O &M இற்கு கையளிக்கப் பட்டது | பூரத்தியாகிய DMAS (NRW செயற்பாட்டில் உள்ளது) | பூரத்தியாகிய DMAS (பூர்த்தியாக்கல்) | பூர்தியாகிய குழாய் குழாயிடல் கிமீ | பூர்த்தியாகிய வீட்டு இழப்பீடு |
|---|---|---|---|---|---|---|---|
| கிழக்கு | 2015 யூலை | 2021 யூன் | 4 | 7 | 4 | 212 | 27,467 |

எவ்வாறாயினும், வருமானமற்ற தண்ணீரின் பெறுமதி 39 சதவீதத்திற்கு கீழ் படிப்படியாக வீழ்ச்சியடைந்துள்ளதுடன் வருமானமற்ற தன்னீரின் சராசரிப் பெறுமதி பூர்த்தியாக்கப்பட்ட DMAs இற்காக தற்போது வரை 15.2 சதவீதமாக உள்ளமையும் அவதானிக்கப்பட்டது. செயற்திட்டத்தின் இலக்கை அடைவதற்கு இந்த ஆண்டான 2020 இறுதியில் இந்த மிகுதி DMAs ஐ பூர்தியாக்கி கையளிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

பட்டியலிடப்பட்ட ஒப்பந்த காலப்பகுதிக்குள் வேலைகளை பூத்தியாக்குவதற்கும் செயற்திட்ட கண்காணிப்பு குழுவால் ஒப்பந்த வேலைகளை நெருக்கமாக கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ளவாறு 200,008 மீற்றர்கள் குழாயிடல் வேலைகள் மற்றும் 4,030 வீட்டு உரிமையாளர்களின் பரிமாற்ற சேவை வழங்கல் என்பன பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 20 மாவட்ட மீற்றரிடலில், 03 மாவட்ட மீற்றரிடல் பகுதிகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வருமானமற்ற தண்ணீர் குறைப்பின் முகாமைத்துவத்தை ஈடுபடுத்துவதற்கு கையளிக்கப்பட்டிருந்தது. | | | |
| (இ) | கசிவு கண்டுபிடித்தல் மற்றும் சகல ஏனைய தொடர்புபட்ட உபகரணங்களின் வழங்கல் மற்றும் பொருத்துவதற்கான ஒப்பந்தம் 2014 மே 29 இல் வெளிநாட்டு கம்பனி ஒன்றிற்கு ரூபா 24.37 மில்லியன் கிரயத்தில் வழங்கப் பட்டிருந்ததுடன் இது பரஸ்பரம் இடை நிறுத்தப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தத்தின் உள்நாட்டு பகுதியின் கீழ் கொள்வனவு செய்யப்பட வேண்டியிருந்த உபகரணங்கள் ரூபா 10.62 மில்லியன் கிரயத்தில் உள்நாட்டு முகவரால் வழங்கப்பட்டிருந்த போதிலும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் வெளிநாட்டிலிருந்து செய்யப்பட வேண்டுமென வேண்டப்பட்ட கொள்வனவு நடைமுறை 2019 | கசிவு கண்டுபிடித்தல் உபகரணங்கள் வழங்கலில் தாமதம். | முன்னைய ஒப்பநதத்தின் வெளிநாட்டு பகுதி தொடர்பான வருமானமற்ற உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு புதிய கேள்வியொன்று 2018.05.23 இல் கோரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கேள்வியாளரிடம் தொழில்நுட்ப தகைமை இன்மை காரணமாக 2019.04.03 இல் திரும்ப கேள்வி கோரப்பட்டிருந்ததுடன் இறுதியாக 2020.06.10 இல் GCWWMIIP/ADB/EQUIP/IBC/07R ஆம் இலக்க ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்தது. | ஒப்பந்த வேலைகளை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | திசெம்பர் 31 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| (ஈ) | மாலிகாஹந்த வருமானமற்ற தண்ணீர் 06 மாடிக் கட்டிடம் நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் 2017 மார்ச் 23 இல் ரூபா 344.25 மில்லியன் பெறுமதியில் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரருக்கு வழங்கப் பட்டிருந்ததுடன் நிர்மாண வெலைகள் 2017 ஏப்ரல் 27 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2018 ஒக்தோபர் 23 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியவிடப்பட்டது. ஒப்பந்த வேலைகளின் மெதுவான முன்னேற்றம் காரணமாக 2020 திசெம்பர் 31 வரை மூன்று தடவைகள் நீடிக்கப்பட்டது. முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், ஒப்பந்தத்தின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட 100 சதவீதத்துடன் ஒப்பிடும் பொது 81.38 சதவீத்தில் இருந்ததுடன் 2020 மே 31 இல் உள்ளவாறு 82.36 சதவீதத்தை காட்டியிருந்தது. மேலும், குளிரூட்டிகள் பொருத்துதல், பகுதி பிரித்தல், சீலிங் பான் மற்றும் மின்னியல் உபகரணங்களை பொருத்துதல், தண்ணீர் குழாய்கள் பொருத்துதல் மற்றும் வெள்ளையடித்தல் போன்றன 2020 ஆகஸ்ட் 19 இல் | வருமானமற்ற தண்ணீர் கட்டிடம் நிர்மாணம் தாமதப்படல் | செயற்திட்ட அமுலாக்கல் பிரிவு செயற்திட்டத்திற்கு உள்ளீட்டு வளங்களை அதிகரிப்பதற்கு ஒப்பந்தகாரர் தடுப்பதற்கு பல படி முறைகள் எடுக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரருடைய தலைவருடன் (CEO) செயற்திட்ட அமுலாக்கல் பிரிவில் பல கூட்டங்கள் நடாட்டப்பட்டது மற்றும் பொது முகாமையாளரால் (NWSDB) குறிப்பிடப்பட்டவாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தலைமை அலுவலகத்தில் (HO) 2020 யூன் 15 இல் மற்றும் தலைவரால் (NWSDB) குறிப்பிடப்பட்டவாறு மாலிகாகந்த வேலைத்தளத்தில் 2020 செப்தெம்பர் 07 இல் ஆகிய திகதிகளில் நடாத்தப்பட்ட விசேட கூட்டங்கள் உள்ளடங்கலாக ஒப்பந்தகாரருடைய தலைவர் (CEO) மற்றும் ஏனைய பிரதான பதவியணியினர் என்போருடன் பல கூட்டங்களை நடாத்தியிருந்தது.<br><br>மேற்குறிப்பிட்டவற்றின் விளைவால், அதிகமான வெலைகள் (சீலிங் வேலைகள், பகுதி பிரித்தல் வேலைகள், குளிரூட்டி பொருத்துதல் தீயணைப்பு கருவி பொருத்துதல்) நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் கூட்ட தீர்மானத்தின் பிரகாரம் எஸ்றோ கணக்கு வருமானமற்ற தண்ணீர் கட்டிட நிர்மாணம், பகுதி பிரித்தலிற்கு தேவையான பொருட்கள் மற்றும் தீபாதுகாப்பு முறைமை மற்றும் சுகாதார பொருத்திகள் என்பன தொடர்பான வேலைகள் நெறிப்படுத்தப்பட்ட கொடுப்பனவுகளை உறுதிப்படுத்தவதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் திறக்கப்பட்டிருந்ததுடன் பொறியியலாளர் பிரிவு முகாமை செய்யப்பட்டிருந்தது. | வாராந்த மற்றும் காலாண்டு போன்று பௌதீக இலக்குகள் மற்றும் பொறுப்புகளை நிர்ணயிப்பது தொடர்பில் முன்னுரிமையான வேலைகள், சுமூகமாக பூர்த்தியாக்கப்பட்ட வேலைகள் சுட்டிக்காட்டுகின்ற மிகுதியான ஒப்பந்த காலப் பகுதிக்கு குறுகிய கால திட்டங்கள் தளாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையில் பூர்த்தியாக்கப் பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | | | |
| (உ) | எலிகவுஸ் அப்பகுதி பொறியியலாளர் அலுவல நிர்மாணிக்கப்பட்ட மூன்று மாடி கட்டிடம் காரணமாக 2019 மே 02 இல் தேசிய நீர் வழங்கல் மற்றும் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. மேல் பகுதி, சில யன்னல்கள் மற்றும் பிரதான நட்சத்திர கவரில் பொருத்தப்பட்ட கண்ணாடி, என்பவற்றிலிருந்து தண்ணீர் வடிதல், மற்றும் கதவுகள் மற்றும் யன்னல்கள் பொருத்தலில் சேதங்கள் இரண்டாவது கனோப்பி கூரையில் குறைபாடு களஞ்சிய நில பகுதியில் வெள்ளையடித்தல் வேலைகள் தரை பதித்தல் போன்றன காரணமாக 2020 ஆகஸ்ட் 19 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டம் குறைபாட்டு பொறுப்பு காலப்பகுதிக்குள் உரிய குறைபாடுகளை இனங்கண்டு திருத்துவதற்கு தவறியிருந்தது. | குறைபாடுகள் முறைப்படி இனங்கண்டு திருத்தப் பட்டிருக்கவில்லை. | இந்த கட்டிடம் எதிர்காலத்தில் மேலதிகமாக இரண்டிற்கும் அதிகமாக பகுதிகளை கொண்டிருக்கும், வடிவமைப்பு பிரவால் சிபார்சு செய்யப்பட்டவாறு (GCWWMII) சரிவுகளுடாக எவ்வித கசிவுகளும் ஏற்படுவதற்கு கூரை சரிவாக செய்யப்பட்டிருந்தது. ஏற்கனவே ஒப்பந்தகாரரால் சிறிய கசிவுகள் கண்டுபிடித்து திருத்தப்பட்டிருந்தது. சரிவில் ஈரக் கசிவுகள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் கூரை சரிவில் தண்ணீர் கசிவு காரணமாக சுவர் பாசிபடிந்திருந்தது. பொறியியல் உதவியாளர் அறையில் காணப்பட்ட உட்பக்க வெடிப்பகளும் ஒப்பந்தகாரரால் திருத்தப்பட்டிருந்தது. மேலும், அந்த தண்ணீர் கசிவிற்காக ஒப்பந்த உத்தரவாத காலப்பகுதி 2018 திசெம்பர் 31 இலிருந்து செயற்படும் வண்ணம் 10 ஆண்டுகள் உள்ளது. சொல்லப்பட்ட காலப்பகுதிக்குள் காணப்பட்ட எவ்வித புதிய கசிவுகளும் கவனத்திற்கு ஒப்பந்தகாரருடைய பொறுப்பு உள்ளது. சில யன்னல்கள் மற்றும் பிரதான நட்சத்திர கவரில் பொருத்தப்பட்ட கண்ணாடி ஊடாக தண்ணீர் கசிகின்றன. யன்னல்களை சுற்றி தயாரித்த பின்னர் சீலுடன் சீலிப்பட்டவாறு ஒட்டுதல் முறை மூலம் பிரதான நட்சத்திர யன்னல் ஒப்பந்தகாரரால் திருத்தப்பட்டிருந்தது.<br><br>சில கதவு கைபிடிகள் மற்றும் பூட்டுகள் வேலை செய்யாத நிலையில் உள்ளதுடன் கடந்த ஒருவருட பயன்பாட்டிற்காக முறையற்ற கைபிடி விடயம் காரணமாக ஏற்படக்கூடும். ஆனால், O & M பிரிவு மூலம் 2020 ெப்ரவரி 26 இல் குறிப்பிடப்பட்ட குறைபாட்டு பட்டியலில் பட்டியலிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் அந்த குறைபாடுகளை | குறைபாடுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | இயலக்கூடிய விரைவில் கவனிப்பதற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | |

## 3.3 விதிவிலக்கான நடவடிக்கைகள் / செயற்திட்ட நோக்கங்களில் செய்யப்பட்ட கொடுப்பனவுகள்

| இல. | கணக்காய்வு அவதானிப்புகள் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்திட்ட நிர்வாக கைநூலின் பிரகாரம், மேல், மத்திய மாகாணத்தின் பிராந்திய ஆதார சேவைகள் நிலையத்தின் வருமானமற்ற தண்ணீர் குறைப்பு குழுவிற்காக நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 01 இன் கீழ் ரூபா 62.90 மில்லியன் கிரயத்தில் 07 கிறீவ் கப் வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 17.97 மல்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 02 கிறீவ் வாகனங்கள் செயற்திட்ட பகுதியின் கீழ் வந்திருக்காத சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாண பிராந்திய ஆதார நிலையங்களிற்கு மாற்றப்பட்டிருந்தது. மேலும் அந்த கிறீவ் கப் வாகனங்கள் 2020 ஆகஸ்ட 31 இல் வரையும் மேல் மத்திய பிராந்திய ஆதார நிலையத்திற்கு கையளிக்கப் பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட வளங்கள் நோக்கங்களிற்கு புறம்பாக பயன்படுத்தப்பட்டது. | செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு பிரிவிற்கான வாகனங்களிற்காக செயற்திட்டத்தின் கொள்வனவு திட்டத்தின் பிரகாரம், அந்த கிறீவ் வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டது. இதன்படி, செயற் திட்டத்தின் நோக்கெல்லைக்குள் மேல் மத்திய செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு பிரிவுக்கு செயற்திட்டமானது வாகனங்களை கையளிக்கப்பட்டிருந்தது. | உண்மையான கொள்வனவு தேவைகள் இனங்கணப்பட வேண்டுமெனவும் அழுத்தமாக கூறப்பட்டுள்ள குறித்த நோக்கங்களிற்காக தேவையான சொத்துக்கள் பயன்படுத்த வேண்டு மெனவும் வேண்டப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வடிண்டின் போது செயற்திட்ட நடவடிக்கைகளின் கீழ் வந்திருக்காத நீர் வழங்கல் அமைச்சின் இரண்டு ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் எரிபொருள் படிகளாக ரூபா 1.05 | செயற்திட்ட நிதிகள் நோக்கங்களிற்கு புறம்பாக பயன்படுத்தது. இதன் விளைவால், | அந்த கொடுப்பனவுகள் அமுலாக்கல் முகவர் மற்றும் நிறைவேற்றல் முகவரான தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பவற்றால் அமைச்சிற்கிடையில் அவர்களுடைய | உரிய அமைச்சிலிருந்து செலவினத்தை மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டத்துடன் தொடர்புபட்டிருக்காத செலவினம் அதிகரித்தமை. | ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை கடுத்திற்கொண்டு சபையான அனுமதி செய்திருந்தது. எவ்வாறாயினும் அந்த சேவைகள் தற்பொது இடை நிறுத்தப்பட்டது. | |

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| கொழும்பு பெரும்பாக பகுதியில் பொது மக்கள் விழிப்புணர்வு மற்றும் தகவல் பிரச்சாரம் என்பவற்றிற்கான ஒப்பந்தம் ரூபா 81.44 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 31.15 மில்லியன் தொகை ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டமானது 2019 திசெம்பர் 31 வரையும் நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 01 இன் பிரதான நோக்கத்தை அடைவதற்கு தவறியிருந்தது. மேலும், கொழும்பு பெரும்பாக பகுதியில் நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 02 என அழக்கப்பட்ட வேறு அதே செயற்திட்டத்தால் சமூகங்களின் இயலளவை கட்டியொழுப்புவதற்காக ரூபா 65.03 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 2019 ஒக்தோபர் 31 வரை ரூபா 41.82 மில்லியன் தொகை ஏற்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்ட நிதிகளின் குறிப்பிடப்பட்ட தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் கொழும்பு பெரும்பாக பகுதியில் மக்கள் விழிப்புணர்வு மற்றும் இயலளவை | செயற்திட்ட நிதிகளின் கருத்திற்கொள்ள வேண்டிய தொகைகள் கொழும்பு நகரத்திற்கான பொது மக்கள் விழிப்புணர்விற்காக ஒதுக்கப்பட்டு செலவினம் ஏற்பட்டது. | கொழும்பு பெரும்பாக நீர் கழிவுநீர் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் பழமையான வழமையான செயற்திட்டத்திற்கு விசேட தலையிட்டு ஒப்பீடாக உள்ளது அவர்கள் புதிய சேவைகளை பெறுவதற்காக உரிய சமூகத்தினரால் அதிகமான புதிய செயற்திட்டங்கள் வரவழைக்கப்பட்டது ஆனால், இந்த செயற்திட்டம் ஏற்கனவே தண்ணீர் வசதிகளை கொண்டிருந்த சமூதாயத்தினரை கையாண்டமையால் அதிகமான இடையூறுகளிற்கு முகம் கொடுத்திருந்தன. இந்த செயற்திட்டம் நாளாந்தம் 600,000 குடியிருப்பாளர்கள் மற்றும் 400,000 சமூதாயத்தினர் உள்ளடங்கலாக அண்ணளவாக 01 மிலியன் மக்களுடன் கையாள்கின்றது. மேலும், அண்ணளவாக குறைந்த வருமானமுள்ள 100,000 மக்களிற்கான தண்ணீர் சேவைகள் | ரூபா 81.43 மில்லியன் குறிப்பிடத்தக்களவு தொகை கொழும்பு நகரத்திற்கான பொது மக்கள் விழிப்புணர்விற்காக ஒரே இரண்டு செயற்திட்டங்களிற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. ஆகவே, குழாய்கள் குழாயிடல் முறை மாற்றப்பட்டமையால் திருத்த வேண்டியிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| கட்டியொழுப்புவதற்காக மாத்திரம் ஏற்பட்டவை கணக்காய்வில் ஐயத்திற்கிடமாகவுள்ளது. | | வழங்கப்பட்டுள்ளது. PPTA சமூகத்தினருக்கிடையில் விழிப்பணர்வு சேவை வேண்டுகை கருத்திற்கொள்ளல் சமூதாய ஆரம்பிப்பு மற்றும் நடத்தை மாற்றத்திற்கான NGO மற்றும் விழிப்பணர்வு உருவாக்கல் மற்றும் ஊடக நடவடிக்கைகளிற்கான ஆலோசனைகள் என்பவற்றினை ஒதுக்குவதற்கு சிபார்சு செய்யப்பட்டது. | |

## 3.5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| கணக்காய்வு அவதானிப்புகள் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| 2007 பெப்ரவரி 15 ஆந் திகதிய 01/2007 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு நிகழ்ச்சித்திட்டம்-செயற்திட்டம்-01 உள்ளக கணக்காய்வாளரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்விற்கு உட்படுத்தப் பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் மீதான நலிவான கட்டுப்பாடு செயற்திட்ட செயலாற்றலை பாதகமாக பாதிக்கும். | உள்ளக கணக்காய்வு பிரிவிலிருந்து பதில் பெறப்பட்டது. எவ்வாறாயினும், பதில் பெறப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வாளரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |